# மோனோவேலண்ட் மற்றும் பைவேலண்ட் COVID-19 தடுப்பூசிகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகள்

Vaccinate WA
CovidVaccineWA.org

**COVID-19 தடுப்பூசிகளைப் பற்றி விவரிக்க "மோனோவேலண்ட்" அல்லது "பைவேலண்ட்" என்ற சொற்கள் பயன்படுத்தப்படுவதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். இந்த இரண்டு வகையானத் தடுப்பூசிகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் மற்றும் நீங்கள் தகுதி பெறும் போது புதுப்பிக்கப்பட்ட பைவேலண்ட் பூஸ்டரைச் செலுத்திக்கொள்வதன் முக்கியத்துவம் ஆகியவற்றைப் பற்றி பேசலாம்.**

## மோனோவேலண்ட் மற்றும் பைவேலண்ட் ஆகிய இரண்டு தடுப்பூசிகளுக்கு இடையே உள்ள வித்தியாசம் என்ன?

மோனோவேலண்ட் தடுப்பூசி என்பது வைரஸின் ஒரு திரிபு அல்லது வைரஸ் கூறைக் கொண்ட ஒரு தடுப்பூசி ஆகும்.

பைவேலண்ட் தடுப்பூசி என்பது வைரஸின் இரண்டு திரிபுகள் அல்லது வைரஸ் கூறுகளைக் கொண்ட ஒரு தடுப்பூசி ஆகும்.

## COVID-19 தடுப்பூசிகளில் எவை மோனோவேலண்ட் மற்றும் எவை பைவேலண்ட் தன்மை கொண்டவை?

அனைத்து முதன்மைத் தொடர்களுக்கான அசல் COVID-19 தடுப்பூசிகளும், அசல் பூஸ்டர்களும் மோனோவேலண்ட்* ஆகும். இந்தத் தடுப்பூசிகள் COVID-19 தொற்றை ஏற்படுத்தும் வைரஸின் அசல் திரிபுகளிலிருந்து உருவாக்கப்பட்டது.

புதுப்பிக்கப்பட்ட Pfizer மற்றும் Moderna COVID-19 பூஸ்டர்கள் ஆகிய இரண்டுமே பைவேலண்ட் பூஸ்டர் ஆகும். அவை COVID-19 இன் அசல் திரிபு மற்றும் புதிய ஓமிக்ரான் திரிபுகள், BA.4 மற்றும் BA.5 ஆகியவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்டன.

## பைவேலண்ட் தடுப்பூசிகள் மோனோவேலண்ட்டை விட அதிக திறன் கொண்டவையா?

COVID-19 தொற்றுக்கு எதிராக மோனோவேலண்ட் பூஸ்டர்களைக் காட்டிலும், பைவேலண்ட் COVID-19 பூஸ்டர்கள் பரந்த அளவிலான பாதுகாப்பை வழங்குகின்றன, மேலும் கடுமையான நோய் மற்றும்/அல்லது மரணத்திலிருந்து, குறிப்பாக ஓமிக்ரான் திரிபிலிருந்து பாதுகாக்கும் காலத்தையும் நீட்டிக்கிறது என்று புதுப்பிக்கப்பட்ட பூஸ்டர்களுக்கான ஆரம்ப மருத்துவ பரிசோதனைகள் தெரிவிக்கின்றது.

*வயது வந்தோர்களால் புதுப்பிக்கப்பட்ட பைவேலண்ட் mRNA பூஸ்டரைப் பெற முடியாவிட்டால் அல்லது பெறாவிட்டால், முதன்மைத் தொடரை நிறைவுசெய்த வயது வந்தோர்கள், இதற்கு முன்பு COVID-19 பூஸ்டரைப் பெறவில்லை எனில், Novavax மோனோவேலண்ட் பூஸ்டரைப் பெற்றுக்கொள்ளலாம். Novavax பூஸ்டர்கள் ஓமிக்ரான் மாறுபாடு திரிபுகளைத் **தாக்காது**.*

## பைவேலண்ட் பூஸ்டரைப் பெறுவது ஏன் முக்கியமானது?

இது தற்போது அமெரிக்காவில் பரவி இருக்கும் COVID-19 இன் மிகவும் ஆதிக்கம் செலுத்தும் ஓமிக்ரான் திரிபுகளிலிருந்து பாதுகாக்க உருவாக்கப்பட்ட ஒரே வகை COVID-19 தடுப்பூசியாகும், அதனால் பைவேலண்ட் பூஸ்டரைப் பெறுவது முக்கியம் ஆகும்.

## நான் ஏற்கனவே COVID-19ஆல் பாதிக்கப் பெற்றிருந்தாலோ அல்லது அதற்கு முன் மோனோவேலண்ட் பூஸ்டரைப் பெற்றிருந்தாலோ நான் பைவேலண்ட் பூஸ்டரைப் பெற வேண்டுமா?

ஆம், நீங்கள் ஏற்கனவே COVID-19 தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அல்லது அதற்கு முந்தைய மோனோவேலண்ட் பூஸ்டரைப் பெற்றிருந்தாலும், நீங்கள் தகுதி பெற்றிருந்தால், புதுப்பிக்கப்பட்ட பைவேலண்ட் பூஸ்டரைப் பெறுவது பரிந்துரைக்கப்படுகிறது. அதிகபட்ச செயல்திறனுக்காக, சமீபத்தில் COVID-19 தொற்றால் பாதிக்கப்பட்ட நபர்கள், அவர்களின் அறிகுறிகள் அல்லது பாசிட்டிவ் பரிசோதனையின் தொடக்கத்திலிருந்து 3 மாதங்களுக்குள் புதுப்பிக்கப்பட்ட பூஸ்டர் டோஸ் உட்பட எந்தவொரு COVID-19 தடுப்பூசி பெற்றுக்கொள்வதையும் தாமதப்படுத்தலாம்.

## நான் ஒரு குறிப்பிட்ட பைவேலண்ட் பூஸ்டர் பிராண்டைப் பெற வேண்டுமா?

6 மாதங்கள் முதல் 4 வயது வரையிலான குழந்தைகள் – அவர்களின் முதன்மைத் தொடரில் பெற்ற அதே பிராண்டின் புதுப்பிக்கப்பட்ட பைவேலண்ட் டோஸைப் பெற வேண்டும்.

5 வயது குழந்தைகள் - Pfizer முதன்மைத் தொடரை நிறைவுசெய்த குழந்தைகள் புதுப்பிக்கப்பட்ட Pfizer பைவேலண்ட் பூஸ்டரை மட்டுமே பெற முடியும்.

5 வயது குழந்தைகள் - Moderna முதன்மைத் தொடரை நிறைவுசெய்த குழந்தைகள் புதுப்பிக்கப்பட்ட Moderna அல்லது Pfizerபைவேலண்ட் பூஸ்டரைப் பெறலாம்.

6 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் – தங்கள் முதன்மைத் தொடருக்கு எந்த பிராண்டைப் இவர்கள் பெற்றிருந்தாலும் Moderna அல்லது Pfizer பைவேலண்ட் பூஸ்டரைப் பெறலாம்.

Washington State Department of Health
DOH 825-082 December 2022 Tamil
இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லதுகேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.